நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள். 06.01.2020

2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 06.01.2020ம் தேதி திங்கள்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.வீ.குணசேகர்.B.E,
ஆணையாளர் (கூ.பொ) மற்றும் தனிஅலுவலர்

**1)** போடிநாயக்கனூர் நகராட்சியில் 14 ஆம் மத்திய நிதிக்குழுவின் 2019–2020 ம் ஆண்டிற்கான மத்திய மான்ய திட்டத்தின் நிதி ரூ.238.65 இலட்சம். புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகளின் காரணமாக சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்கு ரூ.240 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் செய்வதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.2 சீனிமுகமது நகரில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 36.00 |
| 2 | வார்டு எண்.30 அம்மாகுளம் 5வது குறுக்கு தெருவில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 15.00 |
| 3 | வார்டு எண்.1 வடிவேல் நகரில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 31.00 |
| 4 | வார்டு எண்.33ல் புதுகாலனி தெரு எண்.6ல் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 19.00 |
| 5 | வார்டு எண்.33ல் அசோக் நகரில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி. | 35.00 |
| 6 | வார்டு எண்.33ல் புதுகாலனி தெரு எண்.8,9,10,11ல் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி. | 25.00 |
| 7 | வார்டு எண்.33ல் புதுகாலனி தெரு எண்.2,5,7ல் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி. | 25.00 |
| 8 | வார்டு எண்.31ல் டி.வி.கே.கே நகர் தெரு எண்.5,6,7,8,9ல் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி. | 40.00 |
| 9 | வார்டு எண்.30ல் அம்மாகுளம் சீனி அஜ்மல்கான் நகரில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி. | 14.00 |
| மொத்தம் | | ரூ.240.00 |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.10/2020/இ1)**
**தீர்மான எண் : 01** அனுமதிக்கப்பட்டது.

2)அரசாணை எண் 101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 27176/P3/2018 நாள் 01.11.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்த தொழிலாளர்கள் மூலம் பணிக்கு 70 துப்புரவு பணியாளர்களை தனியார் வாயிலாக out sourcing முறையில் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி ஊதிய அடிப்படையில் பணியமர்த்தி துப்புரவு பனிகள் மேற்கொள்ள மின்னனு ஒப்பந்தபுள்ளி 27.12.2018ம் தேதி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய Ourland Engineering Works Pvt.Ltd.Chennai நிறுவனத்திற்கு நகர் மன்ற தீர்மான எண்: 351 நாள்: 28.12.2018ல் மன்ற அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் 31.12.2019 உடன் ஒரு வருட காலம் முடிவடைவதால் மேற்கண்ட நிறுவனம் பணியிணை சரிசர செய்து வருவதாலும் மேலும் அந்நிறுவனம் தொடர்ந்து பணிமேற்கொள்ள விருப்பம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளதாலும் மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி உத்தரவு நீடித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

2019-2020ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர், தேனி அவர்களால் நிர்ணயம் செய்த தினக்கூலி ஊதியம் ரூ.360/- ஆகும், மேலும் ESI, EPF & Insurance, நிர்வாக செலவு, பாதுகாப்பு உபகரணங்கள், சீருடை, மற்றும் உரிய உபகரணங்களுடன் சேர்த்த மதிப்பீட்டு தொகை ரூ. 1.25 கோடியுடன், 2020-2021ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய உயர்வினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டு தொகையில் 10% தொகை சேர்த்து மொத்த மதிப்பீட்டு தொகை. ரு.1,37,50,000/—ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

**ந.க.எண் 3791/2018/எச்2**
**தீர்மான எண் : 02** அனுமதிக்கப்பட்டது.

3) அரசாணை எண் 101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 28369/J3/2018 நாள் 22.11.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்த தொழிலாளர்கள் மூலம் பணிக்கு 50 துப்புரவு பணியாளர்களை தனியார் வாயிலாக out sourcing முறையில் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி ஊதிய அடிப்படையில் பணியமர்த்தி துப்புரவு பனிகள் மேற்கொள்ள மின்னனு ஒப்பந்தபுள்ளி 07.01.2019ம் தேதி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய Ourland Engineering Works Pvt.Ltd.Chennai நிறுவனத்திற்கு நகர் மன்ற தீர்மான எண்: 355 நாள்: 31.01.2019ல் மன்ற அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் 17.01.2020 உடன் ஒரு வருட காலம் முடிவடைவதால் மேற்கண்ட நிறுவனம் பணியிணை சரிசர செய்து வருவதாலும் மேலும் அந்நிறுவனம் தொடர்ந்து பணிமேற்கொள்ள விருப்பம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளதாலும் மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி உத்தரவு நீடித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

2019-2020ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர், தேனி அவர்களால் நிர்ணயம் செய்த தினக்கூலி ஊதியம் ரூ.360/- ஆகும், மேலும் ESI, EPF & Insurance, நிர்வாக செலவு, பாதுகாப்பு உபகரணங்கள், சீருடை, மற்றும் உரிய உபகரணங்களுடன் சேர்த்த மதிப்பீட்டு

தொகை ரூ. 87 இலட்சத்துடன், 2020-2021ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய உயர்வினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டு தொகையில் 10% தொகை சேர்த்து மொத்த மதிப்பீட்டு தொகை. ரூ.95,70,000/– ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

**ந.க.எண் 5086/2018/எச்2**
**தீர்மான எண் : 03** அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி